ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# திருவாய்மொழி நூற்றந்தாதி

## தனியன்

அல்லும் பகலும் அனுபவிப்பார் தங்கட்குச்,
சொல்லும் பொருளுந் தொகுத்துரைத்தான், – நல்ல
மணவாள மாமுனிவன் மாறன் மறைக்குத்,
தணவா நூற்றந்தாதி தான்.

மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிவன்,
தன்னருளால் உட்பொருள்கள் தம்முடனே – சொன்ன,
திருவாய்மொழி நூற்றந்தாதியாந் தேனை,
ஒருவா தருந்துநெஞ்சே! உற்று.

உயர்வே பரன்படியை உள்ளதெல்லாம் தான்கண்டு,*
உயர்வேதம் நேர்கொண்டு உரைத்து,* – மயர்வேதும்–
வாராமல் மானிடரை வாழ்விக்கும் மாறன் சொல்,*
வேராகவே விளையும் வீடு. (2) (1)

வீடுசெய்து மற்றெவையும் மிக்கபுகழ் நாரணன் தாள்,*
நாடுநலத்தால் அடைய நன்குரைக்கும்,* – நீடுபுகழ்–
வண்குருகூர் மாறனிந்த மாநிலத்தோர் தாம் வாழப்,*
பண்புடனே பாடியருள் பத்து. (2) (2)

'பத்துடையோர்க்கு என்றும் பரன் எளியனும் பிறப்பால்,*
முத்திதரு மாநிலத்தீர்! மூண்டவன்பால்,* – பத்திசெயும்'–
என்றுரைத்த மாறன்தன் இன்சொல்லாற் போம்,* நெடுகச்–
சென்ற பிறப்பாம் அஞ்சிறை. (3)

அஞ்சிறைய புட்கள் தமை 'ஆழியானுக்கு,*நீர்–
என்செயலைச் சொல்லும்' என இரந்து,* – விஞ்ச
நலங்கியதும் மாறனிங்கே நாயகனைத் தேடி,*
மலங்கியதும் பத்து வளம். (4)

வளமிக்க மால்பெருமை மன்னுயிரின் தன்மை*
உளமுற்று அங்கூடுருவ ஓர்ந்து,* – தளர்வுற்று–
நீங்கநினை மாறனைமால் நீடிலகு சீலத்தால்,*
பாங்குடனே சேர்த்தான் பரிந்து. (5)

பரிவதில் ஈசன் படியைப் பண்புடனே பேசி,*
அரியனலன் ஆராதனைக்கென்று,* – உரிமையுடன்–
ஓதியருள் மாறன் ஒழிவித்தான் இவ்வுலகில்*
பேதையர்கள் தங்கள் பிறப்பு. (6)

பிறவியற்று நீள்விசும்பில் பேரின்பம் உய்க்கும்,*
திறமளிக்கும் சீலத் திருமால்,* – அறவினியன்–

பற்றுமவர்க்கு என்று பகர்மாறன் பாதமே,*
உற்றதுணை என்றுளமே! ஓடு. (7)

ஓடுமனம் செய்கையுரை ஒன்றினில்லாதார் உடனே,*
கூடிநெடு மாலடிமை கொள்ளும் நிலை,* – நாடறிய-
ஓர்ந்தவன்தன் செம்மை உரைசெய்த மாறனென,*
ஏய்ந்துநிற்கும் வாழ்வாம் இவை. (8)

இவையறிந்தோர் தம்மளவில் ஈசன் வந்தாற்ற*
அவையவங்கள் தோறும் அணையும் – சுவையதனைப்
பெற்று* ஆர்வத்தால் மாறன் பேசின சொற்பேச,* மால்-
பொற்றாள் நம் சென்னி பொரும். (9)

பொருமாழிசங்குடையோன் பூதலத்தேவந்து,*
தருமாறேரே துவறத் தன்னை,* – திரமாகப்-
பார்த்து உரைசெய்மாறன் பதம் பணிக என்சென்னி,*
வாழ்த்திடுக என்னுடைய வாய். (10)

வாயும் திருமால் மறைய நிற்க,* ஆற்றாமை-
போய் விஞ்சி மிக்க புலம்புதலாய்,* – ஆய-
அறியாதவற்றோடு அணைந்தழுத மாறன்,*
செறிவாரை நோக்கும் திணிந்து. (11)

திண்ணிதா மாறன் திருமால் பரத்துவத்தை,*
நண்ணி அவதாரத்தே நன்குரைத்த,* – வண்ணமறிந்து-
அற்றார்கள் யாவர் அவரடிக்கே ஆங்கவர்பால்,*
உற்றாரை மேலிடாதூன். (12)

ஊனமறவே வந்து உள்கலந்த மாலினிமை-
யானது,* அனுபவித்தற்காம் துணையா,*-வானில்-
அடியார் குழாம் கூட வாசையுற்ற மாறன்,*
அடியாருடன் நெஞ்சே ஆடு. (13)

ஆடிமகிழ் வானில் அடியார் குழாங்களுடன்,*
கூடியின்பம் எய்தாக் குறையதனால்,* – வாடிமிக-
அன்புற்றார் தந்நிலைமை ஆய்ந்துரைக்க மோகித்து*,
துன்புற்றான் மாறன் அந்தோ. (14)

அந்தாமத்தன்பால் அடியார்களோடு இறைவன்,*
வந்தாரத்தான் கலந்த வண்மையினால்,*-- சந்தாபம்-
தீர்ந்த சடகோபன் திருவடிக்கே நெஞ்சமே,*
வாய்ந்த அன்பை நாள் தோறும் வை. (15)

வைகுந்தன் வந்து கலந்ததற்பின் வாழ்மாறன்,*
செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து,*-- நைகின்ற-
தன்மைதனைக் கண்டு உன்னைத் தான்விடேன் என்றுரைக்க,*
வன்மையடைந்தான் கேச வன். (16)

கேசவனால் எந்தமர்கள் கீழ்மேலெழு பிறப்பும்*
தேசடைந்தார் என்று சிறந்துரைத்த,* -- வீசுபுகழ்-
மாறன் மலரடியே மன்னுயிர்க்கெல்லாம் உய்கைக்கு,*
ஆறென்று நெஞ்சே அணை. (17)

அணைந்தவர்க்கள் தம்முடனே ஆயனருட்கு ஆளாம்,*
குணந்தனையே கொண்டு உலகைக்கூட்ட,*--இணங்கி மிக-
மாசில் உபதேசம் செய்மாறன் மலரடியே,*
வீச புகழ் எம்மா வீடு. (18)

எம்மா வீடும் வேண்டா என்தனக்கு உன்தாளிணையே,*
அம்மா அமையுமென ஆய்ந்துரைத்த,*--நம்முடைய-
வாழ்முதலாம் மாறன் மலர்த்தாளிணை சூடிக்,*
கீழ்மையற்று நெஞ்சே கிளர். (19)

கிளரொளிசேர் கீழுரைத்த பேறு கிடைக்க,*
வளரொளிமால் சோலை மலைக்கே,* --தளர்வறவே-
நெஞ்சை வைத்துச் சேருமெனும் நீடுபுகழ் மாறன்தாள்,*
முன்செலுத்துவோம் எம் முடி. (20)

முடியார் திருமலையில் மூண்டு நின்ற மாறன்,*
அடிவாரந் தன்னில் அழகர் - வடிவழகைப்-
பற்றி,* முடியும் அடியும் படிகலனும்,*
முற்றும் அனுபவித்தான் முன். (21)

முன்னம் அழகரெழில் மூழ்கும் குருகையர்க்கோன்,*
இன்னவாளவென்ன எனக்கரிதாய்த்* - தென்ன,-
கரணக் குறையின் கலக்கத்தை,*கண்ணன்
ஒருமைப் படுத்தான் ஒழிந்து. (22)

ஒழிவிலாக் காலம் உடனாகி மன்னி,*
வழுவிலா ஆட்செய்ய மாலுக்கு,* - எழுசிகர-
வேங்கடத்தைப் பாரித்த மிக்க நலம் சேர்மாறன்,*
பூங்கழலை நெஞ்சே! புகழ். (23)

புகழொன்று மால் எப் பொருள்களுந்ம் தானாய்,*
நிகழ்கின்ற நேர்காட்டி நிற்க* - மகிழ்மாறன்,-
எங்கும் அடிமைசெய இச்சித்து வாசிகமாய்,*
அங்கடிமை செய்தான் மொய்ம்பால். (24)

மொய்ம்பாரும் மாலுக்கு முன்னடிமை செய்து உவப்பால்,*
அன்பால் ஆட்செய்பவரை ஆதரித்தும்,* - அன்பிலா-
மூடரை நிந்தித்தும் மொழிந்தருளும் மாறன்பால்,*
தேடரிய பத்தி நெஞ்சே! செய். (25)

செய்ய பரத்துவமாய்ச் சீரார் வியூகமாய்,*
துய்ய விபவமுமாய்த் தோன்றிவற்றுள்,* -எய்துமவர்க்கு-
இந்நிலத்தில் அர்ச்சாவதாரம் எளிதென்றான்,*
பன்னுதமிழ் மாறன் பயின்று. (26)

பயிலும் திருமால் பதந்தன்னில்,* நெஞ்சம்-
தயலுண்டு நிற்கும் ததியர்க்கு* - இயல்வுடனே-
ஆளானார்க்கு ஆளாகும் மாறன் அடியதனில்,*
ஆளாகார் சன்மம் முடியா. (27)

முடியாத ஆசைமிக முற்று கரணங்கள்,*
அடியார் தம்மை விட்டு அவன்பால் - படியா,*

ஒன்றொன்றின் செயல்விரும்ப உள்ளதெல்லாம் தாம்விரும்ப*
துன்னியதே மாறன்தன் சொல். (28)

‘சொன்னுவில் வாழ்புலவீர்! சோறு கூறைக்காக,*
மன்னுத மானிடரை வாழ்த்துதலால், - என்னுகும்?*
என்னுடனே மாதவனை ஏத்தும்‘ எனுங்குருகூர்,*
மன்னருளான் மாறும் சன்மம். (29)

‘சன்மம் பலசெய்து தான் இவ் வுலகளிக்கும்*
நன்மையுடை மால்குணத்தை நாள் தோறும்,* - இம்மையிலே-
ஏத்துமின்பம் பெற்றேன்‘ எனும் மாறனை உலகீர்,*
நாத்தழும்ப ஏத்தும் ஒரு நாள். (30)

ஒருநாயகமாய் உலகுக்கு,* வானோர்-
இருநாட்டில் ஏறியுய்க்கும் இன்பம் - திரமாகா,*
மன்னுயிர்ப்போகம் தீது மாலடிமையே இனிதாம்,*
பன்னியிவை மாறனுரைப் பால். (31)

பாலரைப்போல் சீழ்கிப் பரனளவில் வேட்கையால்,*
காலத்தால் தேசத்தால் கைகழிந்த,* - சால-
அரிதான போகத்தில் ஆசையுற்று நைந்தான்,*
குருகூரில் வந்துதித்த கோ. (32)

கோவான ஈசன் குறை எல்லாம் தீரவே*
ஓவாத காலத் துவாதிதனை,* - மேவிக்-
கழித்தடையக் காட்டிக் கலந்த குண மாறன்,*
வழுத்துதலால் வாழ்ந்தது இந்த மண். (33)

மண்ணுலகில் முன்கலந்து மால்பிரிகையால்,*மாறன்-
பெண்ணிலைமையாய்க் காதல் பித்தேறி,* - எண்ணிடில் முன்-
போலிமுதலான பொருளை அவனாய் நினைந்து, *
மேல்விழுந்தான் மையல்தனின் வீறு. (34)

வீற்றிருக்கும் மால்விண்ணில் மிக்க மயல்தன்னை,*
ஆற்றுதற்காத் தன்பெருமை ஆனதெல்லாம்,* தோற்ற வந்து-
நன்று கலக்கப்போற்றி நன்கு உகந்து வீறுரைத்தான், *
சென்ற துயர்மாறன் தீர்ந்து. (35)

தீர்ப்பார் இலாதமயல் தீரக் கலந்த மால்,*
ஓர்ப்பாது மின்றி உடன்பிரிய,* - நேர்க்க-
அறிவழிந்து உர்றரும் அறக்கலங்க,* பேர்க்கேட்டு-
அறிவு பெற்றான் மாறஞ்சீ லம். (36)

சீலமிகு கண்ணன் திருநாமத்தால் உணர்ந்து,*
மேலவன்தன் மேனிகண்டு மேவுதற்கு*, - சால-
வருந்தி இரவும் பகலும் மாறாமல் கூப்பிட்டு*
இருந்தனனே தென்குருகூர் ஏறு. (37)

‘ஏறு திருருவுடைய ஈசன் உகப்புக்கு,*
வேறுபடில் என்னுடைமை மிக்கவுயிர்,* - தேறுங்கால்-
என்தனக்கும் வேண்டா‘ எனும் மாறன் தாளை நெஞ்சே,*
நந்தமக்குப் பேறாக நண்ணு. (38)

நண்ணாது மாலடியை நானிலத்தே வல்வினையால்*
எண்ணாராத் துன்பமுறும் இவ்வுயிர்கள்,* தண்ணிமையைக்-
கண்டிருக்க மாட்டாமல் கண்கலங்கும் மாறனருள்,*
உண்டு நமக்கு உற்றதுணை ஒன்று. (39)

'ஒன்றுமிலைத் தேவு இவ்வுலகம் படைத்த மால்,*
அன்றி'என ஆரும் அறியவே,* - நன்றாக-
மூதலித்துப் பேசியருள் மொய்மகிழோன் தாள் தொழவே,*
காதலிக்கும் என்னுடைய கை. (40)

கையாரும் சக்கரத்தோன் காதலின்றிக்கே இருக்க,*
பொய்யாகப் பேசும் புறனுரைக்கு,* - மெய்யான-
பேற்றை உபகரித்த பேரருளின் தன்மை தனைப்*
போற்றினனே மாறன் பொலிந்து. (41)

பொலிக பொலிக என்று பூமகள்கோன் தொண்டர்,*
மலிவுதனைக் கண்டுகந்து வாழ்த்தி* - உலகில்-
திருந்தாதார் தம்மைத் திருத்திய மாறன்சொல்,*
மருந்தாகப் போகும் மன மாசு. (42)

மாசறு சோதி கண்ணன் வந்து கலவாமையால்,*
ஆசை மிகுந்து பழிக்கு அஞ்சாமல்,* - ஏசறவே-
மண்ணில் மடலூர மாறன் ஒருமித்தான்,*
உண்ணடுங்கத் தான்பிறந்த ஊர். (43)

ஊர நினைந்த மடல் ஊரவும் ஒண்ணாதபடி,*
கூரிருள்சேர் கங்குலுடன் கூடிநின்று,* - பேராமல்-
தீதுசெய்ய மாறன் திருவுள்ளத்து சென்ற துயர்,*
ஓதுவது இங்கு எங்ஙனே யோ? (44)

'எங்ஙனே நீர் முனிவது என்னையினி? நம்பியழகு,*
இங்ஙனே தோன்றுகின்றது என்முன்னே,-அங்ஙன்-
உருவெளிப்பாடா உரைத்த தமிழ் மாறன்,*
கருதும் அவர்க்கு இன்பக் கடல். (45)

கடல் ஞாலத்து ஈசனை முன் காணாமல் நொந்தே,*
உடனா அனுசரிக்கல் உற்று,*- திடமாக-
வாய்ந்தவனாய்த் தான்பேசும் மாறன் உரையதனை*
ஆய்ந்துரைப்பார் ஆட்செய்ய நோற்றார். (46)

'நோற்ற நோன்பாதியிலேன் நுன்தனை விட்டாற்றகில்லேன்,*
பேற்றுக்கு உபாயம் உன்தன் பேரருளே-சாற்றுகின்றேன்,*
இங்கென்னிலை' என்னும் எழில்மாறன் சொல்வல்லார்,*
அங்கமரர்க்கு ஆரா அமுது. (47)

ஆரா அமுதாழ்வார் ஆதரித்த பேறுகளைத்*
தாராமையாலே தளர்ந்து மிகத்* - தீராத-
ஆசையுடன் ஆறுமை பேசி அலமந்தான்,*
மாசறு சீர் மாறன் எம்மான். (48)

மாநலத்தால் மாறன் திருவல்ல வாழ்புகப்போய்த்,*
தானிளைத்து வீழ்ந்து அவ்வூர் தன்னருகில்* - மேல்நலங்கித்-
துன்பமுற்றுச் சொன்ன சொலவு கற்பார் தங்களுக்கு*

பின்பிறக்க வேண்டா பிற. (49)

‘பிறந்து உலகம் காத்தளிக்கும் பேரருட் கண்ணா!*உன்-
சிறந்த குணத்தால் உருகும் சீலத் - திறம் தவிர்த்து,*
சேர்ந்து அனுபவிக்கும் நிலை செய்யென்ற சீர்மாறன்,*
வாய்ந்த பதத்தே மனமே! வைகு. (50)

’வைகல் திரு வண்வண்டூர் வைகும் இராமனுக்கு,*என்-
செய்கைதனைப் புள்ளினங்காள்!செப்பும்‘என*-கைகழிந்த-
காதலுடன் தூதுவிடும் காரி மாறன் கழலே,*
மேதினியீர்! நீர் வணங்குமின். (51)

மின்னிடையார் சேர்கண்ணன் மெத்தென வந்தான் என்று,*
தன்னிலை போய் பெண்ணிலையாய் தான்தள்ளி,*-’உன்னுடனே-
கூடேன்?‘என்றூடும் குருகையர்க்கோன் தாள் தொழவே,*
நாள்தோறும் நெஞ்சமே! நல்கு. (52)

நல்ல வலத்தால் நம்மைச் சேர்த்தோன் முன் நண்ணாரை,*
வெல்லும் விருத்த விபூதியன் என்று,* - எல்லையறத்-
தானிருந்து வாழ்த்தும் தமிழ்மாறன் சொல்வல்லார்,*
வானவர்க்கு வாய்த்த குரவர். (53)

’குரவை முதலாம் கண்ணன் கோலச் செயல்கள்,*
இரவு பகல் என்னாமல் என்றும்,* - பரவுமனம்-
பெற்றேன்!‘என்றே களித்துப் பேசும் பராங்குசன்தன்,*
சொல் தேனில் நெஞ்சமே! துவள். (54)

துவளறுசீர் மால்திறத்து தொன்னலத்தால்,* நாளும்-
துவளறுதன் சீலமெல்லாம் சொன்னான்,* - துவளறவே-
முன்னம் அனுபவத்தில் மூழ்கி நின்ற மாறனதில்,*
மன்னும் உவப்பால் வந்த மால். (55)

மாலுடனே தான்கலந்து வாழப் பெருமையால்,*
சால நைந்து தன்னுடைமை தானடையக்* - கோலியே,-
தானிகழ வேண்டாமல் தன்னைவிடல் சொல்மாறன்,*
ஊனமறு சீர் நெஞ்சே! உண். (56)

’உண்ணுஞ்சோறுதி ஒரு மூன்றும் எம்பெருமான்*
கண்ணன்‘என்றே நீர்மல்கிக் கண்ணிணைகள்,* - மண்ணுலகில்-
மன்னு திருக் கோளூரில் மாயன் பால் போம் மாறன்,*
பொன்னடியே நந்தமக்குப் பொன். (57)

பொன்னுலகு பூமியெல்லாம் புள்ளினங்கட்கே வழங்கி,*
என்னிடரை மாலுக்கு இயம்பும்‘என* - மன்னு திரு-
நாடு முதல் தூது நல்கிவிடும் மாறனையே*
நீடுலகீர்!போய்வணங்கும் நீர். (58)

நீராகிக் கேட்டவர்கள் நெஞ்சழிய,* மாலுக்கும்-
ஏரார் விசும்பில் இருப்பரிதா-,* ஆராத-
காதலுடன் கூப்பிட்ட காரிமாறன் சொல்லை,*
ஓதிடவே உய்யும் உலகு. (59)

உலகுய்யமால் நின்ற உயர் வேங்கடத்தே,*

அலர்மகளை முன்னிட்டு அவன்தன், – மலரடியே*
வஞ்சரணய்ச் சேர்ந்த மகிழ்மாறன் தாளிணையே,*
உஞ்சரணய் நெஞ்சமே! உள். (60)

உண்ணிலவைவருடன் இருத்தி இவ்வுலகில்,*
எண்ணிலா மாயன் எனைநலிய,* – எண்ணுகின்றன்'–
என்று நினைந்தோலமிட்ட இன்புகழ்சேர் மாறனெனக்,*
குன்றிவிடுமே பவக் கங்குல். (61)

கங்குல் பகலரதி கைவிஞ்சி மோகமுற,*
அங்கதனைக் கண்டோர் அரங்கரைப்பார்த்து,* – 'இங்கிவள்பால்–
எஞ்செ(ய்)ய நீர் எண்ணுகின்றதென்னும் நிலை சேர்மாறன்,*
அஞ்சொலுற நெஞ்சு வெள்ளையாம். (62)

வெள்ளிய நாமம் கேட்டு விட்டகன்ற பின்மோகம்,*
தெள்ளியமால் தென்திருப்பேர் சென்றுபுக,* – உள்ளமங்கே–
பற்றிநின்ற தன்மை பகரும் சடகோபற்கு,*
அற்றவர்கள் தாம் ஆழியார். (63)

ஆழிவண்ணன் தன்விசயம் ஆனவை முற்றுங்காட்டி,*
'வாழிதனல்!' என்று மகிழ்ந்து நிற்க,* – ஊழிலவை–
தன்னை இன்று போல்கண்டு தானுரைத்த மாறஞ்சொல்,*
பன்னுவரே நல்லது கற்பார். (64)

கற்றேர் கருதும் விசயங்களுக்கு எல்லாம்,*
பற்றும் விபவகுணப் பண்புகளை,* – உற்றுணர்ந்து–
மண்ணிலுள்ளோர் தம்மிழவை வாய்ந்துரைத்த மாறன் சொல்,*
பண்ணில் இனிதான தமிழ்ப் பா. (65)

பாமருவு வேதம் பகர்மால் குணங்களுடன்,*
ஆமழகு வேண்டற்பாடாம் அவற்றைத்,* – தூமனத்தால்–
நண்ணி அவனைக்காண நன்குருகிக் கூப்பிட்ட,*
அண்ணலை நண்ணர் ஏழையர். (66)

ஏழையர்கள் நெஞ்சை இளகுவிக்கும் மாலழகு,*
சூழவந்து தோன்றித் துயர்விளைக்க,* – ஆழுமனம்–
தன்னுடனே அவ்வழகைத் தானுரைத்த மாறன்பால்,*
மன்னுமவர் தீவினைபோம் மாய்ந்து. (67)

மாயாமல் தன்னைவைத்த வைசித் திரியாலே,*
தீயா விசித்திரமாய்ச் சேர்பொருளோடு* – ஓயாமல்,–
வாய்ந்துநிற்கும் மாயன் வளமுரைத்த மாறனைநாம்,*
ஏய்ந்துரைத்து வாழு நாள் என்று? (68)

'என்தனை நீ இங்கு வைத்தது ஏதுக்கென,*மாலும்–
என்தனக்கும் என்தமர்க்கும் இன்பமதா,* – நன்றுகவி–
பாட'எனக் கைம்மாறிலாமை,* பகர்மாறன்–
பாடணைவார்க்கு உண்டாம் இன்பம். (69)

இன்பக் கவிபாடுவித்தோனை இந்திரையோடு,*
அன்புற்று வாழ் திருவாறன்விளையில்,* – துன்பமறக்–
கண்டடிமை செய்யக் கருதிய மாறன் கழலே,*
திண்திறலோர் யாவர்க்கும் தேவு. (70)

தேவன் உறைபதியில் சேரப் பெருமையால்,*
மேவும் அடியார் வசனும் மெய்ந்நிலையும்,* - யாவையும்-
தானும் நிலையும் சங்கித்து அவைதெளிந்த மாறன்பால்,*
மாநிலத்தீர்! நங்கள் மனம். (71)

நங்கருத்தை நன்றுக நாடிநிற்கும் மாலறிய,*
இங்கிவற்றில் ஆசை எமக்குளதென்?* - சங்கையினுல்,-
தன்னுயிரில் மற்றில் நசை தானொழிந்த மாறன்தான்,*
அந்நிலையை ஆய்ந்துரைத்தான் அங்கு. (72)

அங்கமரர் பேண அவர்நடுவே வாழ்ந்திருமாற்கு,*
இங்கோர் பரிவரிலை என்றஞ்ச,* - எங்கும்,-
பரிவருளர் என்னைப் பயம் தீர்ந்த மாறன்,*
வரிகழல் தாள் சேர்ந்தவர் வாழ்வார். (73)

வாராமல் அச்சம் இனி மால்தன் வலியினையும்,*
சீரார் பரிவருடன் சேர்த்தியையும்,* - பாருமெனத்-
தானுகந்த மாறன் தாள் சார்நெஞ்சே! சாராயேல்,*
மானிடவரைச் சார்ந்து மாய். (74)

மாயன் வடிவழகைக் காணுத வல்விடாயாய்,*
அதற விஞ்சி அழுதலற்றும்,* - தூயபுகழ்-
உற்ற சடகோபனை நாம் ஒன்றிநிற்கும் போதுபகல்,*
அற்றபொழுதானது எல்லி யாம். (75)

எல்லி பகல்நடந்த இந்தவிடாய் தீருகைக்கு,*
மெல்லவந்து தான்கலக்க வேணும்' என,* - நல்லவர்கள்-
மன்னு கடித்தானத்தே மாலிருக்க மாறன்கண்டு,*
இந்நிலையைச் சொன்னுன் இருந்து. (76)

இருந்தவன் தான் வந்து இங்கிவர் எண்ணமெல்லாம்,*
திருந்த இவர் தந்திறத்தே செய்து,* - பொருந்தக்-
கலந்து இனியனுயிருக்க கண்ட சடகோபர்,*
கலந்தநெறி கட்டுரைத்தான் கண்டு. (77)

கண்ணிறைய வந்து கலந்தமால் இக்கலவி,*
திண்ணிலயா வேணுமெனச் சிந்தித்து,* - தண்ணிதெனும்-
ஆருயிரின் ஏற்றம் அதுகாட்ட ஆய்ந்துரைத்தான்,*
காரி மாறன் தன் கருத்து. (78)

கருமால் திறத்தில் ஓரு கன்னிகையாம் மாறன்,*
ஒருமா கலவி உரைப்பால்,* - திறமாக-
அந்நியருக்கு ஆகாது அவன் தனக்கே ஆகுமுயிர்,*
இந்நிலையை யோரு நெடிதா. (79)

நெடுமால் அழுகுதனில் நீள்குணத்தில்,* ஈடு-
படுமா நிலையுடைய பத்தர்,* - அடிமைதனில்-
எல்லை நிலம் தானுக எண்ணினுன் மாறன்,*அது-
கொல்லை நிலமான நிலை கொண்டு. (80)

'கொண்டபெண்டிர் தாம்முதலாக் கூறுமுற்றுர், கன்மத்தால்*
அண்டினவர் என்றே அவரைவிட்டுத்,* - தொண்டருடன்-

சேர்க்குந் திருமாலைச் சேரும், என்றான்,* ஆர்க்கும்இதம்-
பார்க்கும் புகழ்மாறன் பண்டு. (81)

பண்டை உறவான பரனைப் புளிங்குடிக்கே-
கண்டு,* 'எனக்கு எல்லா உறவின் காரியமும்,* - தண்டறநீ-
செய்தருள்' என்றே இரந்த சீர்மாறன் தாளிணையை,*
உய்துணை என்று உள்ளமே! ஓர். (82)

'ஓராநீர் வேண்டினவை உள்ளதெல்லாம் செய்கின்றேன்,*
நாராயண் அன்றோ நான்?' என்று,* - பேருறவைக்-
காட்ட அவன் சீலத்தில் கால்தாழ்ந்த மாறனருள்,*
மாட்டிவிடும் நம் மனத்துமை. (83)

மையார் கண் மாமார்பில் மன்னும் திருமாலைக்,*
கையாழி சங்குடனே காண எண்ணி,* - மெய்யான-
காதலுடன் கூப்பிட்டுக் கண்டுகந்த மாறன்பேர்,*
ஓதவுய்யுமே இன்னுயிர். (84)

'இன்னுயிர்மால் தோன்றினது இங்கென்னெஞ்சில்' என்று,*கண்ணால்-
அன்னவனைக் காணவெண்ணி, ஆண்பெண்ணாய்*, பின்னையவன்-
தன்னை நினைவிப்பவற்றால் தான்தளர்ந்த மாறனருள்,*
உன்னுமவர்க்கு உள்ளம் உருகும். (85)

உருகுமால் என்னெஞ்சம் உஞ்செயல்கள் எண்ணிப்,*
பெருகுமால் வேட்கை'எனப் பேசி,* - மருவுகின்ற-
இன்னாப்புடன் அவன் சீர் ஏய்ந்துரைத்த மாறஞ்சொல்,*
என்நா சொல்லாதிருப்பது எங்கு? (86)

எங்காதலுக்கடி மாலேய்ந்த வடிவழகென்று'*
அங்காது பற்றாசா ஆங்கவன்பால்,* - எங்குமுள்ள-
புள்ளினத்தைத் தூதாகப் போகவிடும் மாறன்தாள்,*
உள்ளினர்க்குத் தீங்கை அறுக்கும். (87)

அறுக்குமிடர்' என்று அவன்பால் ஆங்குவிட்ட தூதர்,*
மறித்துவரப் பற்றா மனத்தால்,* - அறப்பதறிச்-
செய்ய திரு நாவாயில் சொல்ல நினைந்தான்,மாறன்*
மையலினால் செய்வறியாமல். (88)

மல்லடிமை செய்யும்நாள் மால்தனைக் கேட்ட,*அவன்-
சொல்லும் அளவும் பற்றாத் தொன்னலத்தால்,* - செல்கின்ற-
ஆற்றாமை பேசி அலமந்த மாறனருள்,*
மாற்றாகப் போகும் என்தன் மால். (89)

மால் உமது வாஞ்சைமுற்றும் மன்னுமுடம்பின் முடிவில்*
சாலநண்ணிச் செய்வன்'எனத் தானுகந்து* - மேலவனைச்-
சீரார் கணபுரத்தே சேரும்' எனும் சீர்மாறன்,*
தாராேனோ நந்தமக்குத் தாள்? (90)

தாளடைந்தோர் தங்கட்குத் தானே வழிந்துணையாம்,*
காளமேகத்தை கதியாக்கி,* - மீளுதலாம்-
ஏதமிலா விண்ணுலகில் ஏகவெண்ணும் மாறனென,*
கேதமுள்ளது எல்லாம் கெடும். (91)

கெடுமிடர் வைகுந்தத்தைக் கிட்டினாற்போல்,*
தடமுடை அனந்தபுரம் தன்னில்,* - படவரவில்-
கண்துயில்மாற்கு ஆட்செய்யக் காதலித்தான் மாறன்,*உயர்-
விண்தனில் உள்ளோர் வியப்பவே. (92)

வேய்மருதோள் இந்திரைகோன் மேவுகின்ற தேசத்தைத்*
தான்மருவாத் தன்மையினால் தன்னைஇன்னம்* - பூமியிலே-
வைக்குமெனச் சங்கித்து மால் தெளிவிக்கத் தெளிந்த,*
தக்கபுகழ் மாறன் எங்கள் சார்வு. (93)

சார்வாகவே அடியில் தானுரைத்த பத்திதான்,*
சீரார் பலத்துடனே சேர்ந்ததனைச்,* - சேராமல்-
கண்டுரைத்த மாறன் கழலிணையே நாள்தோறும்*
கண்டுகக்கும் என்னுடைய கண். (94)

கண்ணன் அடியிணையில் காதலுறுவார் செயலைத்*
திண்ணமுறவே சுருங்கச் செப்பியே,* - மன்னவருக்குத்-
தானுபதேசிக்கை தலைக் கட்டினான் மாறன்,*
ஆனபுகழ் சேர்தன் அருள். (95)

அருளால் அடியில் எடுத்த மாலன்பால்,*
இருளார்ந்த தம்முடம்பை இச்சித்து,* - இருவிசும்பில்-
இத்துடன் கொண்டேக இசைவு பார்த்தே இருந்த,*
சுத்திசொல்லும் மாறன் செஞ்சொல். (96)

செஞ்சொற் பரன் தனது சீராரும் மேனிதனில்*
வஞ்சித்துச் செய்கின்ற வாஞ்சைதனின்*, - விஞ்சுதலைக்-
கண்டவனைக் கால்கட்டிக் கைவிடுவித்துக் கொண்ட*
திண்திறல் மாறன் நம் திரு. (97)

திருமால் தன்பால் விருப்பம் செய்கின்ற நேர்கண்டு,*
அருமாயத்தன்ற கல்விப்பான் என்?,* - பெருமால்நீ-
இன்று என்பால் செய்வானென்?' என்ன இடருற்று நின்றான்,*
துன்னுபுகழ் மாறனைத்தான் சூழ்ந்து. (98)

சூழ்ந்துநின்ற மால்விசும்பில் தொல்லைவழி காட்ட,*
ஆழ்ந்ததனை முற்றும் அனுபவித்து,* - வாழ்ந்து அங்கு-
அடியருடனே இருந்தவாற்றை உரை செய்தான்,*
முடிமகிழ்சேர் ஞான முனி. (99)

முனிமாறன் முன்புரைசெய் முற்றின்பம் நீங்கித்,*
தனியாகி நின்று தளர்ந்து,* - நனியாம்-
பரம பத்தியால் நைந்து பங்கையத்தாள் கோனை,*
ஒருமையுற்றுச் சேர்ந்தான் உயர்ந்து. (100)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்!
மணவாள மாமுனி திருவடிகளே சரணம்!

---